**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் - 2021**

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 9186-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் ஐஐ ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட மற்றும் செயற்திட்ட மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வட மாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் (நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு) 3 தீவுகளில் உள்ள சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவு மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கான உற்பத்தி எரிசக்தி பயன்பாட்டை ஆதரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். வெளியிலிருந்து நிதியளிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 288 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்பட்ட வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 180.72 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.25 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 106.56 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.75 மில்லியன் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளுடன் இந்த அறிக்கை அமைந்திருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2.2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி.ஈஆர்டி.2007.02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2022 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 ஆகஸ்ட் 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி நிலைமை காரணமாக வரையறுக்கப்பட்ட பதவியணியினர், பணி நேரத்திற்கான மட்டுப்பாடு, எரிபொருள் மற்றும் போக்குவரத்து பற்றாக்குறை என்பன பணிபுரிதல் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவாக 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களை 2022 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறை வேலையின் பெறுமதி ரூபா 208.88 மில்லியனாக காட்டப்பட்டிருந்த போதிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 258.86 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 49.98 | தற்போது, றேுளுனுடீ இன் செலவினங்களுடன் செயற்திட்டத்தின் ஏற்பட்ட செலவினங்களைக் சமப்படுத்துவதற்கு றேுளுனுடீ இன் நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிப்பதற்கு விரிவான நடைமுறை வேலை (றுஜீ) கணக்கிணக்கத்தை செயற்திட்டம் தயாரித்து வருகிறது. | தொடர்புடைய றேுளுனுடீ பதிவேடுகளுடன் செயற்திட்ட நடைமுறை வேலை மீதிகளை கணக்கிணக்கம் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 பௌதீக செயன்முன்னேற்றம்**

இச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள், நயினாதீவு தீவில் 150 கனமீற்றர்.். நாள் கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் (னயல ளநயறயவநச சநளநசளந ழளஅழளளை) பொறியை வழங்கி நிறுவுதல் மற்றும் தொடர்புடைய சிவில் வேலைகள் மற்றும் 2.0 தொண்.். நாள் ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதன முறைமையை நிர்மாணித்தல் எனும் பெயரிலான இரண்டு கூறுகளை கொண்டுள்ளது. அதில், ஊநுடீ இன் கலப்பு மின்சக்தி முறைமை செயற்திட்டத்தில் இருந்து மின்சார வழங்கல் கிடைக்காததால், 2.0 தொண்.். நாள் ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதன முறைமையை நிர்மாணிப்பதற்கான கேள்வி கோரல் இடைநிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் செயற்திட்டமானது எந்தவொரு பௌதீக முன்னேற்றத்தையும் காட்டியிருக்கவில்லை. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 89 சதவீதம் மற்றும் 72.53 சதவீதம் ஆகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூறுகள் வாரியான முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| இல. | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தொடர்புடைய சிவில் பணிகளுடன் 150 கனமீற்றர்.். நாள் கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் பொறியை வழங்கி நிறுவுதல் | 2021 திசெம்பர் 16 இல் ஒப்பந்தத்தின் கீழ் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கருவிகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொறி தொடர்பான செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கருவிகள் 2022 ஆகஸ்ட் 31 வரை ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ழுருஆ கருவிகளின் பகுதி விநியோகத்தைத் தவிர அனைத்து குறைபாடுகளும் ஏற்கனவே சீர்செய்யப்பட்டுள்ளன. இந்த கருவிகள் உள்ளூர் சந்தையில் கிடைக்கவில்லை. மேலும் நிலவுகின்ற அரசின் நெருக்கடி காரணமாக வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்த கருவிகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து 2022 செப்தெம்பர் மாத இறுதிக்குள் வழங்கப்படும். | மேலும் தாமதிக்காமல் தொடர்புடைய கருவிகளை வழங்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2.0 தொண்.். நாள் ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதன முறைமையை நிர்மாணித்தல் | யுனுடீ பணியின் செயற்திட்ட நோக்கெல்லையிலிருந்து இந்த கூறுகளை நீக்குவதற்கு யுனுடீ தீர்மானித்திருந்தது. | யுனுடீ பணியில் உள்ள நன்கொடையளிக்கும் முகவரின் (யுனுடீ) ஒப்பந்தத்தின் பெறுகை பட்டியலில் இருந்து இந்த முன்மொழிவை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மற்றுமொரு மேம்பாட்டிற்காக சேமிப்பு மானியத் தொகையைப் பயன்படுத்துவதற்கு நன்கொடையளிக்கும் முகவருடன் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 150 கனமீற்றர்∴ நாள் கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் (ளுறுசுழு) பொறியை வழங்கி நிறுவுதலிற்கான ஒப்பந்தம் 2020 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு காலம் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியடைந்தது. 2021 திசெம்பர் 16 இல் விலைப்பட்டியல் இல. ஐஐஐ இன் உருப்படி இல.14 இன் கீழ் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கருவிகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு தொடர்பான கருவிகள் 2022 ஆகஸ்ட் 31 வரையிலும் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 3 தீவுகளில் நீர் கோபுரங்கள் மற்றும் விநியோக குழாய் வலையமைப்பை பூர்த்தி செய்வதில் தாமதம் மற்றும் மின் தடை காரணமாக நாளொன்றுக்கு 150 கனமீற்றர் பொறி இயலளவிற்கு பதிலாக 2022 பெப்ரவரி 28 அளவில் நாளாந்த அடிப்படையில் ஏறத்தாழ 90 கனமீற்றர் நீர் உற்பத்தி செய்யப்படுகிறது. | இந்த கருவிகள் உள்ளூர் சந்தையில் கிடைக்காததுடன் அரசின் நிலவும் நெருக்கடி காரணமாக வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்த கருவிகள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதன் மூலம் 2022 செப்தெம்பர் இறுதிக்குள் வழங்கப்படும்.<br>மேலும், தீவுகளில் நீர் கோபுரங்கள் மற்றும் விநியோக வலையமைப்புக்களை நிர்மாணித்தல் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதுடன் றேளுனுடீ இன் ழுருஆ பிரிவு நயினாதீவு தீவில் வீட்டு இணைப்புக்களை வழங்கத் தொடங்கியுள்ளது. | மேலும் தாமதப்படுத்தாமல் ழுருஆ கருவிகளை வழங்கி வீட்டு இணைப்புக்களை வழங்குவதை துரிதப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | நயினாதீவு தீவு சமூகத்தின் முக்கிய வாழ்வாதாரம் மீன்பிடித்தலாக உள்ளதுடன் மீனை பாதுகாப்பதற்கான தேவையொன்று தீவில் காணப்படுகின்ற நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ளது. ஆகையால் நயினாதீவு தீவு மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கி நாளொன்றுக்கு 2 தொண் சிறிய ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் குளிர்பதன முறைமையை நிர்மாணிப்பதற்கு நிதியுதவி வழங்குவதற்கு | இது ஊநுடீ இன் கலப்பின மின்சக்தி முறைமை செயற்திட்டத்தைச் சார்ந்துள்ளதுடன் இது றேளுனுடீ இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. யுனுடீ பணியில் உள்ள நன்கொடையளிக்கும் முகவரின் (யுனுடீ) ஒப்பந்தத்தின் பெறுகை பட்டியலில் இருந்து இந்த முன்மொழிவை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மற்றுமொரு மேம்பாட்டிற்காக சேமிப்பு மானியத் தொகையைப் பயன்படுத்துவதற்கு நன்கொடையளிக்கும் முகவருடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திட்டமிட்டிருந்தது.
எவ்வாறாயினும், நயினாதீவு தீவில் ஊநுடீ இன் கலப்பின மின்சக்தி முறைமை செயற்திட்டத்தில் இருந்து கிடைக்கும் மின்சார வழங்கலில் ஐஸ் தயாரிக்கும் பொறியின் செயற்பாடுகள் தங்கியுள்ளது. ஆகையால் கலப்பின எரிசக்தி முறைமை செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தொடங்கும் வரை ஐஸ் தயாரிக்கும் தொழிற்சாலைக்கான கேள்வி கோரல் பிற்போடப்பட்டிருந்தது. எனினும் கலப்பின எரிசக்தி முறைமைகள் யுனுடீ ஆல் நிதியளிக்கப்படாததால் 2022 பெப்ரவரி 24 முதல் 27 வரை யுனுடீ பணியின் செயற்திட்ட நோக்கெல்லையிலிருந்து இந்தக் கூறுகளை நீக்குவதற்கு யுனுடீ தீர்மானித்தது.

(இ) நயினாதீவு அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகிய 3 தீவுகளில் முறையே 1,170 நீர் இணைப்புக்களை கடல்நீர் மறுபக்க சவ்வூடுபரவல் (ளுறுசுழு) பொறி மூலம் வழங்குவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. எனினும், புதிய நீர் கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர் இணைப்புக்கான விநியோக குழாய் பதிக்கும் பணிகள் செயற்திட்ட நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் இது யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்தின் இதேபோன்ற யுனுடீ செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், இந்த தீவுகளில் உள்ள நீர் கோபுரங்களின் முன்னேற்றம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 29,700 இல் 14,594 மீற்றர் குழாய் பதிக்கும் பணிகள் மாத்திரம் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், இரண்டு நீர் கோபுரங்களும் குழாய் பதிக்கும் பணிகளும் தீவுகளில் நீர் கோபுரங்கள் மற்றும் விநியோக வலையமைப்புக்களை நிர்மாணித்தல் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் றேளுனுடீ இன் ழுருஆ பிரிவு நயினாதீவு தீவில் வீட்டு இணைப்புக்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

வீட்டு இணைப்புக்களை வழங்குவதை துரிதப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 2022 யூன் 30 வரையிலும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 175 எணணிக்கையான இணைப்புக்கள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 அளவில் நயினாதீவு தீவில் ஏற்கனவே உள்ள நீர்த் தாங்கி மூலம் வழங்கப்பட்டன. | | |

**3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் றேுஞனுடீ இன் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என்ற தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அவதானிப்பைக் குறிப்பிட்டு செயற்திட்டத்தின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு செயற்திட்டம் கோரியுள்ளதென்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்கிறோம். | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |